**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 78/2025 |
| Name | : Muthuramalingam |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மணிகண்டன் மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் மோகன் ஆகியோரது கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த **23.08.2023** ம் தேதி மேற்படி தலைமை காவலர் நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை கோகுல் பாலி கிளினிக்கில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த மீனாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். **163/2023** இதச பிரிவுகள் **279, 337** ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். 24.08.2023 **தேதியிட்ட இண்டிமேசன்**

**அ.சா.ஆ.2 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்குக் கோப்பை பெற்ற பெற்று உதவி ஆய்வாளர் **24.08.2023** ம் தேதி **16.45** மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெரியசாமி மற்றும் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றே சாட்சிகள் மீனாள், விசாலாட்சி, கார்த்தி மனைவி விசாலாட்சி, பாலன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனமான TN 37 DB 5151 Jeep compass என்ற வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயந்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **மோட்டர் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் மீனாள் மற்றும் கார்த்தி மனைவி விசாலாட்சி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றுள்ளார். **மீனாள் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும் மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.9 ஆகவும், விசாலாட்சி என்பவரின் காயச் சான்று அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வாதிகளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவில் இருந்து 279, 338 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை 28.08.2023 ம் தேதி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 338 இதச– ன் படி 29.11.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று சரிவர விசாரிக்காமல் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.09 11:38:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்